## ஆண்டவருடைய பிறப்பு
## பகல் திருப்பலி

**எசா 52, 7 -10 , எபி 1: 1 -6, யோவா 1: 1-18**

## அன்பின் பகிர்வில் மலரும் மீட்பரின் மகிழ்ச்சியும் அமைதியும்

### முன்னுரை

இயேசுவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே!

மகிழ்ச்சிநிறைந்த கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு கிறிஸ்துமஸ் மாலையில் ஒரு சிறிய நகர்ப்புற மலைப் பகுதி பனியால் நிறைந்திருந்தது. நள்ளிரவு திருப்பலிக்குத் தயாரிப்பதற்காக பங்குத்தந்தை சற்று முன்கூட்டியே வந்திருந்தார். ஆலயக் கதவின் பூட்டு கடும்பனியின் தாக்கத்தால் திறக்க முடியாமல் இறுகிப் போயிருந்தது. பனிப்புயலின் நடுவில் ஆலயத்திற்கு வந்த இறை மக்கள் ஆலயத்தினுள் நுழைய முடியாமல் தவித்து நின்றனர். சிறுமி ஒருத்தி தன் தந்தையிடம் நாம் உள்ளே செல்ல முடியாவிட்டால் என்ன? இங்கிருந்தே பாடல் பாடலாம், இயேசு நமக்காக வெளியே வருவார் அல்லவா என்று சொன்னாள். அனைவரும் இணைந்து அமைதியான இரவு எனும் பாடலைப் பாடினார்கள். ஒருவர் மெழுகுதிரி கொண்டு வந்தார். இன்னொருவர் சூடாக தேநீர் கொண்டு வந்தார். அந்தத் தெருவே அன்று ஆலயம் போலானது. இறுதியாக ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டு அனைவரும் உள்ளே நுழைந்தபோது இதயங்கள் ஏற்கனவே இதமான அன்பினால் இணைந்திருந்தன. நாம் உள்ளே சென்று இறைவனைச் சந்திக்க இயலாத போது இறைவனே நம்மைச் சந்திக்க வெளியே வருகிறார். இதுவே கிறிஸ்துமஸ்.

இந்தப் புனிதமான திருப்பலிக் கொண்டாட்டத்தை தொடங்கும் இவ்வேளையில் ஆலயக் கதவுகள் மட்டுமல்ல நம் இதயக் கதவுகளும் திறக்கப்பட வேண்டும். இறைமகன் இயேசு நம் உள்ளத்தில், தான் தங்கும் இல்லத்தைக் காண்பாராக.

### மன்னிப்பு மன்றாட்டு

ஆண்டவராகிய இயேசுவே! என் இதயக் கதவுகளை நீர் தட்டியபோது உம்மைக் காக்க வைத்த தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டுகிறோம். ஆண்டவரே இரக்கமாயிரும்.

மனுவுருவாகி எம்மை தேடி வந்த வார்த்தையான கிறிஸ்துவே ! உம்மை எம் அயலாரில் கண்டுணர்ந்து வரவேற்கத் தவறிய தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டுகிறோம். கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

ஆண்டவராகிய இயேசுவே! எம் இருளகற்ற வந்த ஒளியே! ஆணவம் மற்றும் அச்சத்தின் நிழலினுள் பதுங்கிய தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டுகிறோம். ஆண்டவரே இரக்கமாயிரும்.

### மன்னிப்பு ஆசீர்

எல்லையற்ற பரிவின் இறைவன் தன் இரக்கத்தின் ஊற்றைத் திறந்து நம் பாவங்களை மன்னித்து நம் இதயங்களைப் புதுப்பிப்பாராக. தமது பிறப்பின் மறைபொருளை மகிழ்வோடும் அமைதியோடும் கொண்டாடத் தகுதி பெறச் செய்து நிலைவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வாராக.
ஆமென்.

## மறையுரை :

### வாயில்களைத் திறங்கள்: மனுவுருவான கடவுளின் கொடை

ஒரு பள்ளியில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. கிறிஸ்து பிறப்பு நாடகம் அரங்கேற்றப்பட்டது. பள்ளிச் சிறுவன் ஒருவன் அதில் நடித்தான். அவன் பேச வேண்டிய ஒரே ஒரு வசனம்: "இங்கு இடம் இல்லை" என்று அவன் யோசேப்புக்கும் மரியாவுக்கும் சொல்ல வேண்டும். அவ்வளவுதான். மரியாவும் யோசேப்பும் வந்தபோது, அவர்கள் சூழலைக் கண்ட அச்சிறுவனால் அவர்களுக்கு இடமில்லை என்று சொல்ல முடியவில்லை. என்ன செய்வது என்று திகைத்த அவன், சத்திரத்தில் இடமில்லை, ஆனால் எனது அறையில் தங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னானாம். அரங்கம் முழுவதும் ஒரே சிரிப்பலை, அதேசமயம் அனைவரின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. அச்சிறுவன் கிறிஸ்துமஸ் என்றால் என்ன என்பதை, பெரியவர்களை விட நன்கு உணர்ந்திருந்தான். இதயக்கதவுகளைத் திறந்து இறைவன் தன் இல்லத்தை நம் உள்ளத்தில் அமைக்க இடமளிப்பதே கிறிஸ்துமஸ். அவர் தமக்குரியவர்களிடம் வந்தார் அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை எனும் யோவான் நற்செய்தியாளரின் வரிகள் என் உள்ளத்தை ஆழமாய் பாதித்தவை. பல நூறு ஆண்டுகளாக மனித இனம் மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தது. ஆனாலும் இறுதியாக அவர் வந்தபோது அவருக்கு இடமில்லை. சத்திரங்கள் நிறைந்திருந்தன. இல்லங்கள் மூடப்பட்டிருந்தன. நகர்க் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. உற்றுப் பார்க்கிறபோது தான் புலனாகிறது, அவர் பிறக்கின்றபோது கதவுகள் திறக்கப்படுகின்றனவென்று. இடையர்கள் அவரைக் காண விரைகின்றனர். ஞானிகள் தேடி வருகின்றனர். விண்ணவர்கள் பாடுகின்றனர். விலங்குகளுக்கும் அங்கே இடம் இருக்கிறது. அகந்தையும் அதிகாரமும் கொண்டவர்களுடைய கதவுகள் மட்டுமே அடைக்கப்பட்டிருக்கின்றன. எனவே நமது ஆலயக் கதவுகளும் இல்லக் கதவுகளும் திறந்திருக்கும் இவ் வேளையில், நம் உள்ளக் கதவுகள், நம் சமூகக் கதவுகள், நம் நிறுவனக் கதவுகள் திறந்திருக்கின்றனவா எனும் கேள்வியை எழுப்புவது இன்றியமையாதது.

### கிறிஸ்து பிறப்பு விழா இல்லையா ?

கொரோனா பெருந் தொற்றுக் காலத்தில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம் இரத்து செய்யப்பட்டது எனும் செய்தி பரவியது. கூட்டங்கள் இல்லை, பயணங்கள் இல்லை, விருந்துகள் இல்லை, மக்கள் தனிமையில் விடப்பட்டனர். நானும் கிறிஸ்துமஸ் விழாவை தனிமையில் கொண்டாடினேன். கொண்டாட்டங்கள் இன்றி , பரிசுப் பொருட்கள் ஏதுமின்றி கிறிஸ்மஸ் விழா வெறுமையாய் இருந்தது. ஏதுமில்லாமல் போயிடினும் கிறிஸ்துமஸ் விழாவின் இதயமாகத் திகழும் இயேசுவும் திருப்பலியும் இல்லாமல் போகவில்லை. கிறிஸ்து இருக்கும் வரை நற்கருணை இருக்கிறது. கிறிஸ்துமஸ் இரத்து செய்யப்படவில்லை.

வார்த்தை மனிதரானார். இந்த உண்மையே நம் நம்பிக்கையின் மையம். மனித முகத்தோடு இறைவன். மனிதக் கண்களோடு நம்மை நோக்கும் இறைவன். மனித இதயத்தோடு நமக்குச் செவிமடுக்கும் இறைவன். அவர் தொலைவிலிருந்து பேசவில்லை. நம் அருகில் வந்துள்ளார். நம் உரு எடுத்துள்ளார். நம்மிடையே தம் இல்லத்தை அமைத்துக் கொண்டுள்ளார்.

### பெத்லகேம் எனும் அப்பத்தின் (உணவின்) வீடு

லூக்கா 2:7 பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத்

தொட்டியில் கிடத்தினார் என்று சொல்கிறது. தீவனத் தொட்டி அவரின் எளிய முதல் பலிபீடமாக மாறியது. தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்த அதே இயேசு இன்று நம் பலிபீடத்தில் அப்ப வடிவில் கிடத்தப்பட்டிருக்கிறார். வாழும் அப்பம் நமக்கு வாழ்வை ஊட்டிக் கொண்டிருக்கிறது. அதன் வழியாக அவர் வாழ்வதற்கு தேர்ந்தெடுத்த உயிருள்ள இல்லங்களாக, உண்மையான பெத்லகேமாக நாம் மாறுகிறோம்

## மூடப்பட்ட கதவு

ஒரு இளம் தாய் ஒருமுறை என்னிடம் கூறினார்; ஏழு வயதான அவருடைய மகன் ஒருநாள் அவரோடு சண்டையிட்டுவிட்டு அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டான். அவர் வெளியே நின்று கொண்டு, அன்பு மகனே! தயவு செய்து கதவை திற, நான் உன்னை நேசிக்கிறேன் என்றார் . சிறிது அமைதிக்குப் பின்பு, உங்கள் கோபம் தணிந்த பின் கதவைத் திறக்கிறேன் என்றான் அச்சிறுவன். உன்னைப் பிரிந்த அந்த நொடியே என் கோபம் காணாமல் போனது என் அன்பு மகனே என்றார் அந்த தாய்.

இதுவன்றோ இன்று இறைவன் நமக்குச் சொல்லும் செய்தி. நம்முடைய இதய கதவுகளை தட்டி இறைவன் கூறுகிறார் எனக்கு  கோபமில்லை; உனக்காக தவிக்கிறேன். இதுவே கிறிஸ்துமஸ். நம்மைத் தேடி வரும் அளவுக்கு நமது பிரிவு அவரால் தாங்க முடியாததாக இருக்கிறது.

## அவர் தம்மவரிடையே வந்தார்

மகிழ்வும் கண்ணீரும், நம்பிக்கையும் அச்சமும், அருளும் பாவமும் நிறைந்த நம் உலகிற்கு இறைவன் வந்தார். நடுவராக அல்ல நண்பராக வந்தார்.
திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ஒரு முறை இவ்வாறு கூறினார், "அனைவரையும் ஒளிவிக்கும் உண்மையான ஒளி உலகிற்குள் வருகிறது. அவரை வரவேற்கும் ஒவ்வொருவருக்கும் இறைவனின் பிள்ளையாகும் ஆற்றலை அவர் அளிக்கிறார். அவரை வரவேற்று கதவைத் திறந்து அவருக்கு இடமளிக்க அழைப்பு விடப்படுகிறது. கிறிஸ்துவுக்கு இடம் அளிக்கிறபோது தானாகவே தேவையிலிருக்கும் முதியவர், தனிமையில் வாடும் அண்டை வீட்டார், அன்னியர், கைவிடப்பட்ட குழந்தைகள், வீடில்லா மாந்தர், நம்பிக்கை இழந்த நண்பர் போன்ற பலருக்கும் இடம் அளிக்கிறோம். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது என்பது, யாரையெல்லாம் கிறிஸ்து தன்னோடு அடையாளப்படுத்திக் கொள்கிறாரோ, அவர்களையெல்லாம் ஏற்றுக் கொள்வதேயாகும்.

## எபோம்கோப்பின் கொடை

காமரூன் எனும் நாட்டிலிருந்து வந்த மறைப்பணியாளர் ஒருவர் இந்நிகழ்வை பகிர்ந்து கொண்டார். எபோம்கோப் என்பது அவரது சிற்றூரின் பெயர். அவரது குடும்பம் ஏழ்மையில் வாடியது. ஒரு கிறிஸ்துமஸ் விழாவின்போது உணவின்றி,  நன்கொடைகள் ஏதுமின்றி, விளக்குகளுமின்றி அக்குடும்பம் தவித்தது. அண்டை வீட்டார் ஒருவர் அவர்களுக்கு கொஞ்சம் சோறும் சில வாழைப்பழங்களும் தந்து நீங்களும் எனது குடும்பமே என்றார்.  வாழ்க்கை என்னும் போராட்டத்தை எவரும் தனித்து நின்று களம் காணத் தேவையில்லை, என்பதே கிறிஸ்துமஸ் என்று, அன்று புரிந்து கொண்டேன், என்றார் அம்மறைப்பணியாளர்.
பகிரப்படும் உணவு, நோயாளி சந்திப்பு, ஆறுதல் தரும் வார்த்தை என நாம் செய்யும் ஒவ்வொரு அன்புச் செயலும் இயேசுவை மீண்டும் பிறக்கச் செய்கிறது. திறக்கப்படும் கதவுகள் இருள் நிறைந்த இவ்வுலகினுள் அவரது ஒளியைக் கொணர்கின்றன.

## இருளில் ஒளிரும் ஒளி

இன்று போர், வறுமை, தனிமை, நம்பிக்கையின்மை

போன்றவற்றால் நம் உலகம்இருளில் மூழ்கி இருப்பதாகத் தோன்றுகிறது. ஆயினும் யோவான் நற்செய்தி நமக்கு நினைவூட்டுகிறது. ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருளால் அதனை வெற்றி கொள்ள முடியவில்லை.
தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்த அக்குழந்தையே அணையாவிளக்கு . அவர் அருளுக்கு மேல் அருள், கொடைகளுக்கு மேல் கொடைகள் எனக் கொண்டு வருகிறார். எனவே உங்களுக்கு இவ்வாண்டு துன்பம் நிறைந்ததாக, சந்தேகம் நிறைந்ததாக, போராட்டம் நிறைந்ததாக இருந்திருந்திருப்பினும், இந்நாள் உங்களுக்கானதே . பெத்தலகேமில் பிறந்த ஆண்டவர் இயேசு உங்கள் உள்ளத்திலும் புதிதாகப் பிறக்க விரும்புகிறார்.

## யோர்தானின் கடிதம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, சாக்சனி நகர் யோர்தான் என்ற புனித மனிதர் தன் தொலைதூரத்தில் வாழ்ந்து வந்த தன் அன்பு நண்பன் ஒருவனுக்கு எழுதிய கடிதம். மனித உரு எடுத்த வார்த்தையை, மீட்பளிக்கும் வார்த்தையை, அருள்தரும் இனிய வார்த்தையை, இயேசு கிறிஸ்துவை உனக்கு அனுப்புகிறேன். இவ் வார்த்தையை உன் உள்ளத்தில் இருத்து. இவ்வார்த்தை உன் உதட்டில் தேன் போல தித்திக்கட்டும். அதை உள்ளத்தில் இருத்தி தியானி. அவ்வார்த்தையாம் இறைவன் உன்னோடு எல்லாக் காலமும் குடியிருப்பதாக.
இதுவே உங்களுக்கான எனது கிறிஸ்துமஸ் வாழ்த்து. மனித உடல் எடுத்த வார்த்தை உங்களிடையே குடி கொள்ளட்டும். உங்கள் இதயக் கதவுகள் அவரை வரவேற்க எப்போதும் திறந்திருக்கட்டும். உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் அவர் வரவேற்கப்படுவாராக. அப்போது நற்செய்தியின் வார்த்தைகள் மாற்றி எழுதப்படும். அவர் தமக்குரியவர்களிடம் வந்தார் அவர்கள் அவரை ஏற்றுக் கொண்டார்கள். அவர் அவர்களது அன்பில் திளைத்தார், என்று. அன்பு நண்பர்களே அது தான் கிறிஸ்துமஸ் .

ஆண்டவராகிய இயேசுவே! பெத்லகேமின் குழந்தையே! எங்களது உள்ளங்களை இன்று உமது சொந்த ஊரான பெத்லகேமாக மாற்றியருளும். உமது அன்பிற்கு எங்கள் கதவுகளைத் திறந்தருளும். எங்கள் அயலாருக்கு எங்கள் கரங்களைத் திறப்பதன் வழியாக, உன் திருமுக ஒளி எம் வாழ்வின் மூலமாக இவ்வுலகில் ஒளிர்வதாக. ஆமென்

**தயாரிப்பு :**

**அருள் முனைவர் பால் ஜூலியன், ஆஸ்திரேலியா**

**மேலும் விவரங்களுக்கு காண்க....**

**www.virginofrevelationaustralia.com**